**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – அரசு மறுவாழ்வு இல்லங்கள் – 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசிக்கும் இல்லவாசிகளுக்கு 2014, தீபாவளி தினத்தன்று கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் 1 ஜதை வேட்டி–சட்டை மற்றும் புடவை–ரவிக்கைத் துணி வழங்குதல் – ரூ.5,27,000/– நிதி ஒப்பளிப்பு செய்வது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1 D) எண்.24** **நாள்: 01.08.2014**

**ஜய–ஆடி 16, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (டி) எண்.10, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1(2)) துறை, நாள் 04.09.2013.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க.எண்.483/நிர்(3)/ 2013, 02.07.2014.

----

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசிக்கும் இல்லவாசிகளுக்கு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் 1 ஜதை வேட்டி மற்றும் சட்டை/சேலை மற்றும் ரவிக்கை துணி 2013, தீபாவளி தினத்தன்று வாங்கி வழங்குவதற்கு, ரூ.4,50,420 /– நிதி ஒப்பளிப்பு வழங்கி, அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், 2014–2015 ஆம் நிதியாண்டில், 2014, தீபாவளி தினத்தன்று, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள 1119 இல்லவாசிகளுக்கு, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் 1 ஜதை வேட்டி–சட்டை மற்றும் புடவை–ரவிக்கைத் துணி வாங்கி வழங்கும் திட்டத்திற்கு தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.5,41,000/–க்கு நிதி ஒப்பளிப்பும் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை, கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, 2014–2015 ஆம் நிதியாண்டில், 2014, தீபாவளி தினத்தன்று, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள 1119 இல்லவாசிகளுக்கு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் 1 ஜதை வேட்டி–சட்டை மற்றும் புடவை–ரவிக்கை ஆகியவற்றினை ரூ.5,27,000/– (ரூபாய் ஐந்து இலட்சத்து இருபத்து ஏழாயிரம் மட்டும்) செலவில் வாங்கி வழங்க நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், மேற்படி ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்குள் இச்செலவினத்தை மேற்கொள்ளுமாறு, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

[த.பி.பா]

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூக நலன் – 104–முதியோர், இயலாமையுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் - I–திட்டத்தில் சேராதது – AI–தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு இல்லம் – 46–உடைகள், கூடாரச் செலவுகள், பண்டகசாலைப் பொருள்கள் (து.தொ.கு.2235–02–104–AI – 4609).**

5. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.எண்.40252/நிதி(சந)/2014, நாள் 30.07.2014–ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்**
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
நிதித் (ச.ந)துறை, சென்னை–9.
இ. கோ / உ. ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.